# குறுந்தொகை காட்டும் தொழில்கள்

***முனைவர் அ. இராஜாசிங்***
உதவிப் பேராசிரியர்
புனித ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
வெய்க்காலிப்பட்டி

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மார்ச்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.14958612

## *முன்னுரை*

ஆணும் பெண்ணுமாகக் கூடி வாழும் இல்லறத்தில் பொருள் தேவைகளை நிறைவு செய்யும் பொறுப்பு ஆடவர்க்கே இன்றியமையாத ஒன்றாக உள்ளது. இதனையே,

**"வினையே ஆடவர்க்கு உயிரே"** ***(குறுந்தொகை. 135:3)***

என்ற அடி உறுதிப்படக் கூறுகிறது. மேம்பாட்டிற்கு இன்றியமையாத பொருட்களைப் பெறுவதற்கான தொழில்கள் மேற்கொள்வதில் சங்ககால மக்கள் சிறிதும் தயக்கமின்றி ஈடுபட்டமையை குறுந்தொகையின் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## *உழவுத் தொழில்*

வளமான மண்ணும் அளவான நீரும் உழவிற்க்கு இன்றியமையாத இரு கண்களாகும். இவ்வுழவில் ஈடுபட்ட வரை "ஓரேர் உழவர்" என்று பழந்தமிழர்கள் குறிப்பர். ஓரேர் உழவனின் வாழ்க்கையைக் குறுந்தொகைப் படம் பிடித்துக் காட்டுகிறது. மழை பெய்ததால் ஈரப்பட்ட நிலத்தில் உழவன் விதையை விதைப்பதற்காக விழைகிறான்.

இதனை,

**"ஈரம்பட்ட செவ்வியப் பைம்புனத்து**
**ஓரேர் உழவன் போல"** ***(குறுந்தொகை. 134:45)***

எனும் அடிகளில் உழவனுக்கு உழவுத் தொழிலில் இருந்த ஆர்வமும், அவன் பருவம் அறிந்து பயிர் செய்த நுட்பமும் சுட்டப்படுகின்றன.

## *நெல்*

மருதநிலப் பகுதியாகிய வயலில் விளையும் "வெண்ணெல்" மட்டுமன்றி மலையில் விளையும் "ஐவன" நெல்லிற்கும் அருவி நீரைப் பாய்ச்சி வேளாண்மை செய்துள்ளனர். இதனை,

**"அருவிப் பரப்பி ஐவனம் வித்திப்**
**பருவிளைக் குளவியோடு பசுமரல் கட்கும்**
**காந்தள் வேலிச் சிறுகுடி"** ***(குறுந்தொகை. 100:13)***

எனும் அடிகளின் மூலம் அறியமுடிகிறது. இப்பாடல் வழி காந்தள் செடிகளைப் பயிர்க்குப் பாதுகாப்பாக இட்டு வைத்ததையும், பண்டைக் காலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த "ஐவனம்" என்ற மலை நெல்லைப் பற்றியும் அறியமுடிகிறது.

### கரும்பு

நவீன வேளாண் முறைகளில் சிலவகைப் பயிர்களுக்குப் பாத்தி கட்டிப் பயிரிடுவது போலவே பண்டைத் தமிழரும் கரும்பைப் பயிரிட அகலப் பாத்தி கட்டிப் பாசன முறையைக் கையாண்டுள்ளனர். இதனை,

**"கரும்பு நடுபாத்தி யன்ன**
**பெருங்களிற் றடிவழி நிலைஇய"**

**(குறுந்தொகை. 98:23)**

எனும் பாடலடி வழி அறியலாம். யானையின் பெரிய காலடி போல் அப்பாத்தி அமைந்திருந்ததாகக் இப்பாடல் குறிப்பிடுகின்றது. மேலும் கரும்பின் நுனிப் பகுதியைக் காட்டிலும் அடிப்பகுதி மிக்க சுவையுடையதாக இருக்கும். இச்செய்தியை,

**.................கரும்பின்**
**காலெறி கடிகை கண்ணயின் றன்ன**
**வாலெயி றூரிய வசையி றிநீர்**

**(குறுந்தொகை. 287:14)**

என்று குறிப்பிடுவதன் மூலம் கரும்பு பயிரிட்டதை அறியமுடிகிறது.

### திணை

முல்லை நிலப் பகுதிகளில் மரங்களை வெட்டிய இடத்தில் செந்திணையை விதைத்த செய்தியை,

**"கரும்பு மருண்முதல் பைந்தாட் செந்திணை"**

**(குறுந்தொகை. 198:12)**

என்ற அடியும், அத்திணையைப் பறவைகளும், விலங்குகளும் கவரா வண்ணம் காவல் செய்தமையை,

**"மரங்கொல் கானவன் புனந்துளர்ந்து வித்திய**
**பிறங்குகர லிறடி காக்கும்"**

**(குறுந்தொகை. 214:12)**

எனும் அடிகளும் விளக்குகிறது. மேலும் காவல் செய்யும் பொருட்டு கிளிகளை ஓட்டுவதற்குக் "குளிர்" என்ற கருவியைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதைக் கீழ்க்காணலாகும் பாடலடிகள் வழி அறியலாம்.

**"சுடுவன மருங்கிற் கலித்த வேனற்**
**படுகிளி கடியும் கொடிச்சிக் குளிரே"**

**(குறுந்தொகை. 291:12)**

எனும் பாடலடி தெரிவிக்கிறது.

### வரகு

செம்மண்ணையுடைய முல்லை நிலத்தில் வரகு விதைக்கப்பட்டதையும் அதன் நாற்று காற்றில் அசைந்து ஆடுவதையும், அதில் ஓர் இலையை மான்குட்டி கடித்த செய்தியையும்,

**"செவ்வி கொள் வரகின் செஞ்சுவல் கலித்த**
**கௌவை நாற்றின் காரிரு ளோரிலை**
**நவ்வி நாண்மறிக் கவ்விக் கடன்கழிகசும்"**

**(குறுந்தொகை. 282:13)**

எனும் பாடலடி தெரிவிக்கிறது.

### ஊடு பயிர் விளைச்சல்

இன்றைய வேளாண்துறை கண்டுள்ள முன்னேற்றங்களில் "ஊடுபயிர்" என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஊடுபயிரை "மாற்றுப்பயிர்" "பல பயிர்" "தொடர் பயிர்" என்ற வேறு பெயர்களாலும் குறிப்பிடுவர்.

### தினையுடன் அவரையும் பருத்தியும்

மலைச்சாரலில் பெரிய தினைப்புனத்திலுள்ள தினையை அறுவடை செய்த பின்னர், அதன் மறுநாளிடத்தே அவரையை விதைத்துள்ளனர். அவ்வவரை பீத்த செய்தியை,

**"பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகாற்**
**கொழுங்கொடி யவரை பீக்கும்"**

**(குறுந்தொகை. 82:45)**

எனும் பாடலில் கூறப்பட்டுள்ளது.

### களை எடுத்தல்

பயிரிடப்பட்ட நிலத்தில் பயிருடன் சேர்ந்துகளையும் வளரும். அதனைக் களைந்தால் தான் பயிர் நன்கு செழித்து வளரும் என்ற அறிவியல் தொழில் நுட்பம் பண்டையோருக்கு இருந்திருக்கிறது. இக்களையெடுப்பு அல்லது களை மேலாண்மையைச் செய்யும்போது வயலில் உள்ள பயிர்களிடையே காணப்படும் நெய்தல் செடிகளை வேருடன் களைந்து வரப்பிலே போட்டனர். வரப்பின் மேல்: போடப்பட்ட நெய்தல் மலர்கள் காயாமல் வரப்பின் மீது புத்தச் செய்தியை,

**"கைவினை மாக்கள் செய்வினை முடிமார்
சுரும்புண மலர்ந்த வாகங்கீழ்பட
நீடின வரம்பின் வாடிய விடினும்
கொடியரோ நிலம் பெயர்ந்துறையே மென்னாது
பெயர்த்தும் கடிந்த செறுவிற் பீக்கும்
நின்னூர் நெய்தல்"**

***(குறுந்தொகை. 309:16)***

எனும் குறுந்தொகைப் பாடலடியில் குறிக்கப்படுகின்றன.

**அறுவடை**

தினை மிகுதியாக விளைந்தமையால் பகலிலும் இரவிலும் அறுவடை செய்துள்ளனர். பகலைக் காட்டிலும் இரவில் அறுவடை செய்த செய்தியை,

**"சிறுதினை விளைந்த வியன்க ணிரும்புனந்து
இரவு அரிவாரிற் தொண்டகச் சிறுபறை"**

***(குறுந்தொகை. 375:23)***

எனும் அடிகளில் காணலாம். இதில் தொண்டகச் சிறுபறை என்பது தோலால் செய்யப்பட்ட ஓர் இசைக்கருவியாகும்.

**வேட்டுவத் தொழில்**

வேடர்கள் இரைக்காகக் காட்டு விலங்குகளை வேட்டையாடியதைப் பல பாடல்கள் கூறுகின்றன. தாங்கள் உணவின்றி பசியால் வாடும் நேரங்களில் வன்கண்மையுடைய யானையின் கொம்பை விற்று அதன் விலையால் பெறப்படும் உணவை உண்டு வாழும் சிறுகுடியினரின் வேட்டைச் சிறப்பை,

**"காந்தள் அம்சிலம்பில் சிறுகுடி பசித்தென
கடுங்கண் வேழத்துக்கோடு நொடுந்து உண்ணும்"**
எனும் அடிகள் எடுத்துக்காட்டுகின்றன.

**மீன் வேட்டம்**

மீன்களுள் சுறா அதிகமாகப் பிடிக்கப்பட்டன. அவை கூரிய எறியுளி போன்ற கருவிகள் கொண்டு கொல்லப்பட்டன. இவ்வுளி உலர்ந்த மூங்கில் கழியின் தலையிலே கயிற்றாலே ஆக்கப்பட்டிருக்கும். இது படகிலிருந்தபடியே மீனின் மீது எறியும் வகையில் அமைக்கப்பட்ட கருவியாகும்.

பொதுவாக சுறாவேட்டம் இரவில் நிகழும். தேவைக்கும் மேலாக உள்ள சுறா மற்றும் இறா ஆகிய மீன்களை மணற்பரப்பில் உலர்த்துவர் என்பதும், இவற்றால் மணல் புலால் நாற்றம் வீசும் என்பதையும் புலவர்,

**"பெருங் கடற் பரதவர் கோள் மீன் உணங்கலின்
இருங்கழிக் கொண்ட இறவின் வாடலோடு
நிலவு நிற வெண்மணல் புலவ"**

***(குறுந்தொகை. 320:24)***

எனும் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

**ஆயர் தொழில்**

ஆயர் தொழில் செய்வோருள்ள பல பசுக்களைக் கொண்ட வசதியுடை கோவலரும் உண்டு. ஒரு பசுவின் பயனை விற்று அது கொண்டு உண்ணற்கு வறியவரும் உண்டு என்பதை,

**"பல்லான் கோவலர்"**

***(குறுந்தொகை. 358:3)***

எனும் பாடலடி தெரிவிக்கிறது.

ஆடுகளைத் தமக்குச் செல்வமாக உடைய ஆயர்கள் சிலர் காட்டிலே குட்டிளையுடைய ஆட்டிடத்தே இருப்பர். அவர்களுக்குக் கூழ் கொண்டு போகும் இடைக்குலச் சிறுவன் காட்டிலிருந்து வரும்போது ஆட்டுப் பாலோடு வந்து வீட்டினின்று போகும் பொழுது கூழோடு செல்லுவான் என்பதை,

**"பறியுடைக் கையர் மறியினத் தொழிய
பாலொடு வந்து கூழோடு பெயரும்
யாடுடை இடை மகன்"**

***(குறுந்தொகை. 221:24)***

என இயம்புகிறது இந்நூல்.

**முடிவுரை**

சங்கத் தமிழர்கள் வறுமையை விலக்கி நல் வாழ்வு வாழவும், சமுதாயத்தில் செல்வ செழிப்புடன் வாழவும் பல வகையான தொழில்களை இரவு பகல் பாராமல் செய்த வண்ணம் இருந்ததை இக்கட்டுரையின் வழி நன்கு அறிந்து கொள்ள முடிகிறது.